12th August 1963]

திரு. பி. முருகையன் : ஸார், இந்தக் கண்மாய் சுமார் 7 மைல் கரையுடையதாக இருக்கிறது. விவசாயிகள் விவசாயம் செய்ய மழை காலத்தில் போவதற்குக் கஷ்டப்படுகிறார்கள் ; தற்போது ஏரியின் நடுவில் ஒரு ரோடு இருக்கிறது. அதன் மீது ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவச்சலம் : இதுபற்றி மதிப்பிடப் பட்டது. இதற்கு 40,000 ரூபாய் ஆகிறது. வில்லேஜ் வொர்க்ஸ் ப்ரோக்ராமிலிருந்து 15,000 ரூபாய் வரையில் கொடுக்கலாம். அதற்கு மேல் கொடுக்கமுடியாது. பஞ்சாயத்தும், பொது மக்களும் உதவி அளிக்க முன் வந்தால் அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். பஞ்சாயத்தில் நிதி இல்லை என்று சொல்லி விட்டார்கள். அக்கரை உள்ள பொது மக்களும் நிதி வசூலிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

டாக்சிகள்.

** 107 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச் சிராப்பள்ளி முதலிய நகரங்களில் ஓடுகின்ற டாக்சிகளுக்கு மீட்டர் அமைக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதா ?

(இ) இல்லையென்றால், இனிமேலாவது மீட்டர் வைக்கும்படி சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Under the Madras Motor Vehicles Rules, taxis plying in the mofussil should be fitted with either taxi-meters or mile-meters.

** 108 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) தற்போது சென்னை நகரில் எத்தனை டாக்சிகள் உள்ளன?

(இ) இரவு 8 மணிக்கு மேல் டாக்சிகள் ஓடுவதற்கான வசதி செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M BHAKTAVATSALAM : (*a*) 1,607.

(*b*) There is no time restriction for plying taxis.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், சென்னை நகரில் போலீஸ் உபத்திரவத்தால் இரவு 9 மணிக்கு மேல் அதிகமாக டாக்ஸி ஓடுவது இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது கனம் அங்கத்தினர் கருத்தாக இருக்கலாம். போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் அதை அவர்கள் உபத்திரவம் செய்கிறார்கள் என்று சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எவ்வளவோ விபத்துக்கள் ஏற்படுகின்றன. டாக்ஸி டிரைவர்கள்